## கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை - தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலும்

# ரூ.250 கோடியில் குழந்தைகளுக்கான உயர் சிறப்பு பன்னோக்கு மருத்துவமனை!

## சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் 110 அறிவிப்புகளை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வெளியிட்டார்!



**சென்னை, ஜூலை 4-**

**சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் வெளியிட்ட 110 அறிவிப்புகள் வருமாறு:-**

**1.**தென் சென்னை மற்றும் தஞ்சாவூர் மண்டல பகுதிகளில் குழந்தைகளுக்கான உயர்தர சிறப்பு மருத்துவ சிகிச்சை மற்றும் சேவைகளை வழங்குவதற்காக கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனைகிண்டி வளாகத்திலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி இராசா மிராசுதார் மருத்துவமனையிலும் மேம்பட்ட மருத்துவ தொழில்நுட்பம் மற்றும் அதிநவீன வசதிகள் கொண்ட "குழந்தைகளுக்கான உயர் சிறப்பு பன்னோக்கு மருத்துவமனை" ரூபாய் 250.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**2.** சென்னை கே.கே.நகரில் உள்ள அரசு புனர்வாழ்வு மருத்துவமனையானது, மாற்றுத் திறனாளிகளுக்கான அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய மருத்துவமனையாகும். கடந்த ஆண்டு இவ்வளாகத்தில் ஒப்புயர்வு மையக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டு பக்கவாதம், முதுகுத் தண்டு காயம், மூளைக் காயம், பெருமூளை வாதம், தசைக்கூட்டு கோளாறு உட்பட பல்வேறு நோயாளிகளுக்கு மிகச் சிறந்த சேவைகளை வழங்கி வருகிறது. இவ்வளாகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான பிரத்யேக மருத்துவமனை அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் ரூபாய் 50.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**3.** தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் கீழ், நான்கு மண்டல ஆராய்ச்சி மையங்கள் செவிலியர் படிப்பு சார்ந்த ஆராய்ச்சிக்காகவும் மற்றும் இரண்டு மண்டல ஆராய்ச்சி மையங்கள் மருந்தியல் படிப்பு சார்ந்த ஆராய்ச்சிக்காகவும் என ஆறு மண்டல ஆராய்ச்சி மையங்கள் ரூபாய் 16.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**4.** ஈரோடு, திருப்பத்தூர், கன்னியாகுமரி மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் சமூக அளவிலான கருப்பை வாய், மார்பக மற்றும் வாய் புற்று நோய்களை ஆரம்ப நிலையி லேயே கண்டறிந்து சிகிச்சையளிக்கும் முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் படிப்படியாக அனைத்து மாவட்டங்களிலும் ரூபாய் 27.00 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்படும்.

ஏற்கெனவே, 4 மாவட்டங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 38 மாவட்டங்களில் விரிவுப்படுத்த ரூ.27 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**5.**சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டம், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் சிறுநீரகவியல் அறுவை சிகிச்சை மற்றும் இரைப்பை குடலியல் அறுவை சிகிச்சை ஆகிய இரண்டு புதிய சிறப்பு துறைகள் தொடங்கப்படும்.

மேலும், விபத்து மற்றும் அவசரகால சிகிச்சை பிரிவின் ஜீரோ டிலே வார்டுகளில் பயிற்சி பெற்ற 5 அவசரகால மருத்துவ அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, விபத்து மற்றும் அவசரகால சேவைகள் எவ்வித தாமதமும் இன்றி வழங்கப்படுவது உறுதிசெய்யப்படும்.

**6.** அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளை கண்டறிய முழுமையான உடல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, குறைபாடுள்ள குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தகுந்த சிகிச்சைகளை அளிக்க வழிவகை செய்யப்படும். மேலும், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் சுகாதார அட்டை வழங்கி, பச்சிளம் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் நலத்தை தொடர்ந்து கண்காணித்தல், தடுப்பூசி மற்றும் ஊட்டச்சத்து ஆலோசனை வழங்குதல், வளர்ச்சி மதிப்பீடு மற்றும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் ஆகிய அனைத்து சேவைகளும் "குழந்தை நல சிறப்பு மையங்களில்" (Well Baby Clinic) வழங்கப்படும்.

**7.** சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்பு பிரிவிலிருந்து விடுவிக்கப்படும் குறைப் பிரசவம், மிகுந்த எடை குறைவு போன்ற தொடர் கண்காணிப்பு தேவையுடைய குழந்தைகளை அவர்களது இல்லங்களிலேயே, புதிய தொழில்நுட்ப உதவியுடன் (Post Discharge Remote Monitoring of the Vitals) 6 மாதங்கள் வரை தொடர்ந்து கண்காணித்து அக்குழந்தைகளின் முக்கியமான வளர்ச்சி அளவீடுகள் மற்றும் எடை கூடுதல் ஆகியவை உறுதிசெய்யப்படும். இந்த முன்னோடித் திட்டமானது ரூபாய் 1.28 கோடி மதிப்பீட்டில் ஏழு மாவட்டங்களில் முதற்கட்டமாக செயல்படுத்தப்படும்.

**8.** சேலம் மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கருவுறாமை சிகிச்சைக்கான முதற்கட்ட செயற்கை கருத்தரிப்பு மையங்கள் நிறுவப்படும். இம்மையங்களில் கருவுறாமையை கண்டறிவதற்கான இரத்தம் (ம) கருமுட்டை ஆய்வுகள், கருப்பை அகநோக்கு (ம) லேப்பராஸ்கோப்பி பரிசோதனைகள் மற்றும் கருப்பை உட்பகுதியில் கருவூட்டல் (Intrauterine Insemination-IUI) போன்ற சிகிச்சைகள் தகுதியுள்ள தாய்மார்களுக்கு வழங்கப்படும்.

**9.**அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடத்தப்படும் முன்பேறுகால முகாம்களில் (Antenatal Clinic) கருவளர்ச்சிக் குறைபாட்டுடன் கண்டறியப்படும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, "ஊடுகதிர் பரிசோதனை" (Fetal Anomaly Scan) மேற்கொள்ள அருகில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படுவார்கள்.

**10.** மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் 1.7 கோடி நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயாளிகள், இத்திட்ட இணைய முகப்பில் (MTM Portal) பதிவாகி சிகிச்சை மற்றும் சேவைகளை பெற்று வருகின்றனர். இதன் அடுத்த கட்டமாக கட்டுபாடற்ற நோயினால் ஏற்படக்கூடிய விழித்திரை மற்றும் சிறுநீரக உறுப்பு பாதிப்புகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் சிறப்பு பரிசோதனைகள் மாநிலம் முழுவதும் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள தொற்றாநோய் சிகிச்சை மையங்களில் (MTM/NCD Clinic) நடத்தப்படும்.

**11.** நாள்பட்ட நீரிழிவு நோயினால் பாதங்களில் உள்ள நரம்பு மற்றும் இரத்தநாளங்கள் பாதிப்புக்குள்ளாவதால், பாதங்களில் உணர்ச்சி இன்மை மற்றும் புண்கள் ஏற்பட்டு கால் இழப்புக்கு வழிவகுக்கும். இத்தகைய பாதிப்புகளை தொடக்க நிலையிலேயே கண்டறிந்து கால் இழப்பினைத் தடுக்கும் வகையில் "ஒருங்கிணைந்த பாதம் பாதுகாப்போம் திட்டம்" ரூபாய் 26.62 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## ரூ.101 கோடி மதிப்பீட்டில் அதி நவீன மருத்துவ உபகரணங்கள்!

தஞ்சாவூர் மாவட்டத்தில் முதற்கட்டமாக செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் கீழ்க் கண்டவாறு மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படும்.

பாத பாதிப்புகளை கண்டறியும் பரிசோதனை மையங்கள் (Foot Screening Centre) அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அமைக்கப்படும். 100 அரசு மருத்துவமனைகள் மற்றும் 21 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பாத சிகிச்சை மையங்கள் (Foot Clinics) ஏற்படுத்தப்படும்.15 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பாத அறுவை சிகிச்சை (Diabetic Foot Surgery) சேவைகள் வழங்கப்படும்.

இத்திட்டம் சார்ந்த மருத்துவப் பணியாளர்களுக்கு உரிய பயிற்சி மற்றும் சமூக அளவிலான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**12.**திருவள்ளூர், கடலூர், இராமநாதபுரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 4 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மாரடைப்பிற்கான உயிர்காக்கும் உயர் சிகிச்சை அளிப்பதற்கான இருதய உள்ளூடுருவி கதிரியக்க ஆய்வகங்கள் (Cathlab) ரூபாய் 32.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**13.**திருப்பத்தூர், காங்கேயம், திருத்தணி, ஜெயங்கொண்டம் உள்ளிட்ட 25 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் வட்டார மருத்துவமனைகளில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இம்மருத்துவமனைகளில் தாய்சேய் நல சேவைகள், குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவ சேவைகள், விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை சேவைகள், நவீன அறுவை சிகிச்சை பிரிவுகள் உட்பட அனைத்து அத்தியவாசிய மற்றும் சிறப்பு மருத்துவ சேவைகளை திறன்பட வழங்குவதற்கு ஏதுவாக அதிநவீன மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 101.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**14.**தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்ட நிதியுதவியுடன், சென்னை அரும்பாக்கம் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் வழங்கப்படும் மருத்துவ சேவைகளை மேலும் மேம்படுத்த, ரூபாய் 18.13 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**15.**போக்குவரத்து வசதியற்ற மலை கிராமப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் மற்றும் இதர மக்களின் அவசர மருத்துவ சேவைகளுக்காக 25 இரு சக்கர அவசரகால மருத்துவ வாகனங்கள் முதற்கட்டமாக ரூபாய் 1.60 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

இவ்வாகனங்கள் 108 அவசரகால ஊர்திகளுக்கு இணைப்பு வாகனங்களாக (Feeder Ambulance) செயல்பட்டு, நோயாளிகளை மருத்துவமனைகளுக்கு துரிதமாக அழைத்துச் செல்ல வழிவகுக்கும்.

**16.**கிருஷ்ணகிரி - அஞ்செட்டி, நீலகிரி -கொலக்கொம்பை, திண்டுக்கல் - பிலாத்து மற்றும் திருப்பத்தூர் - புதூர்நாடு ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாதுகாப்பான பிரசவத்திற்காக மகப்பேறு காத்திருப்பு அறைகள் ரூபாய் 94.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 20 நடமாடும் மருத்துவமனைகளுக்கு இரத்த பரிசோதனைகளுக்கான பகுப்பாய்வு கருவிகள் (Semi Auto Analyzer) ரூபாய் 14.00 இலட்சம் மதிப்பீட்டிலும் வழங்கப்படும்.

மேலும், பழங்குடியினரிடம் பொதுவாக காணப்படும் சிக்கிள் செல், தலசீமியா நோய்களுக்கான சிறப்பு சிகிச்சைகள் மற்றும் தாய்சேய் நல சேவைகள் வழங்க 50 படுக்கைகள் கொண்ட தனிப் பிரிவு நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஏற்படுத்தப்படும்.

**17.**செங்கல்பட்டு, தூத்துக்குடி, கன்னியாகுமரி உட்பட 25 அரசு மருத்துவக் கல்லூரிகளில் நூறு வகுப்பறைகள் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் ரூபாய் 50.00 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

இதன் மூலம் மருத்துவ மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரித்து, அவர்களுக்கு ஒரு சிறந்த கற்றல் அனுபவத்தை வழங்க உதவுவதோடு, தமிழ்நாட்டின் எதிர்கால மருத்துவர்கள் சிறந்த திறன் மற்றும் தேர்ச்சி பெற்றவர்களாக உருவாக வழிவகுக்கும்.

**18.**மண்டல பயிற்சி நிலையங்கள் (RTI) மற்றும் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் செயல்படும் அவசர சிகிச்சை மருத்துவத் துறையின் வாயிலாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் இதர பொது வாகன ஓட்டுநர்களுக்கு, விபத்து மற்றும் அவசர காலங்களில் வழங்க வேண்டிய உயிர் காக்கும் முதலுதவி சிகிச்சை குறித்த பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியில் இதயநுரையீரல் மீள் உயிர்ப்பித்தல் (CPR) மற்றும் விபத்து காயங்களுக்கான அவசர சிகிச்சை போன்ற உயிர்காக்கும் முதலுதவி குறித்த பயிற்சிகள் வழங்கப்படும்.

விபத்து நேர்ந்த இடத்தில் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் இருப்பதால் அவர்களால்தான் முதலில் காப்பாற்றும் நிலை ஏற்படும். எனவே, அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை குறித்த பயிற்சி வழங்கப்படும்.

**19.**வயது மூப்பு மற்றும் இயலாமையின் காரணமாக முதியவர்களுக்கு மருத்துவம் மற்றும் பராமரிப்பு சேவைகள் அவர்களது இல்லங்களிலேயே பெறுவதற்கான தேவை அதிகரித்து வருகிறது. இதற்காகவே தனிப் பயிற்சிபெற்ற உதவியாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன் புதிய சான்றிதழ் படிப்பு "Certificate Course for Home Based Elderly Care Support Assistant" அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளில் படிப்படியாக தொடங்கப்படும்.

**20.**செங்கோட்டை, பெரம்பலூர், மணப்பாறை, கோவில்பட்டி, வாணியம்பாடி, உடுமலைப்பேட்டை, மேட்டுப்பாளையம் ஆகிய 7 அரசு மருத்துவமனைகளிலும், கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் தலா 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டடங்கள் (Critical Care Blocks) ரூபாய் 190.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**21.** தமிழ்நாட்டில் ஆய்வக சேவைகளை வலுப்படுத்தும் விதமாக கம்பம் தேனி, பத்மநாபபுரம்கன்னியாகுமரி, குளித்தலைகரூர், கும்ப கோணம்தஞ்சாவூர், பெரம்பலூர்பெரம்பலூர், காரைக்குடிசிவகங்கை, தென்காசி தென்காசி, காங்கேயம்திருப்பூர், ஜெயங்கொண்டம்அரியலூர், உளுந்தூர்பேட்டைகள்ளக்குறிச்சி, ஒசூர்கிருஷ்ணகிரி, வேதாரண்யம்நாகப்பட்டினம், திருச்செங்கோடுநாமக்கல், அறந்தாங்கி புதுக்கோட்டை, பரமக்குடிராமநாதபுரம், குடியாத்தம்வேலூர், திண்டி வனம் விழுப்புரம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர்விருதுநகர் ஆகிய 18 அரசு மருத்துவமனைகளில் புதிய மாவட்ட ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகங்கள் ரூபாய் 22.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**22.** திருவண்ணாமலை - செங்கம், மதுரை - திருமங்கலம், ஈரோடு - சத்தியமங்கலம் மற்றும் சேலம் ஆத்தூர் ஆகிய 4 அரசு மருத்துவமனைகளில் தாய்சேய் நல சேவைகளை மேலும் வலுப்படுத்தும் விதமாக, மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்புக்கான புதிய கட்டடங்கள் ரூபாய் 20.44 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**23.** கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையினை மேம்படுத்தும் பொருட்டு உயர்நிலை சி.டி. ஸ்கேன், நவீன எக்ஸ்ரே, அறுவை சிகிச்சைக்கு உதவும் நுண்ணோக்கி, மின் இயற்பியல் கருவி உட்பட உயர்தர மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 60.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். மேலும், இம்மருத்துவமனைக்கு நடமாடும் இரத்த சேமிப்பு வாகனம் ரூபாய் 1.25 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**24.** ஊரகப் பகுதிகளில் 8,713 துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. வாடகை மற்றும் பழைய கட்டடங்களில் செயல்பட்டு வரும் 164 துணை சுகாதார நிலையங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ரூபாய் 75.20 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

25. அனைவருக்கும் நலவாழ்வு எனும் இலக்கை அடைவதற்காக, ஒருங்கிணைந்த அவசிய ஆய்வக மற்றும் இதர சேவைகளை வலுப்படுத்தும் வகையில், 74 மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில், வட்டார பொது சுகாதார அலகுகள் (Block Public Health Units) அமைப்பதற்கான புதிய கட்டடங்கள் ரூபாய் 48.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

26. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அத்தியாவசிய சுகாதார சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன. கிராமப்புற மக்களின் சுகாதார சேவைகளை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, 22 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 33.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

27. ஊரகப் பகுதிகளில் உள்ள 30 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் விரிவான ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்கும் பொருட்டு ரூபாய் 18.00 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

**28.**நகர்ப்புறங்களில் வாழும் ஏழை, எளிய மக்களின் சுகாதார தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில், 50 அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 30.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**29.**அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின்கீழ் 12 ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளை திறம்பட வழங்குவதற்கான வலுவான கட்டமைப்பு மிக அவசியமாகும். எனவே, இதற்கான கட்டமைப்பை மேம்படுத்தும் பொருட்டு 20 அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 30.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**30.**தமிழ்நாட்டில் உள்ள 20 அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள உடற்கூறாய்வு மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 16.20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**31.** தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத்தின்கீழ், சென்னையில் உள்ள ஆர்.எஸ்.ஆர்.எம் மற்றும் இராயப்பேட்டை அரசு மருத்துவமனைகளில் மின்தூக்கி மற்றும் இதர மின்சார பணிகள் உட்பட பல்வேறு கட்டட சீரமைப்பு பணிகள் ரூபாய் 13.57 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**32.** சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின்கீழ் செயல்பட்டு வரும் மருந்து கிடங்கு களுக்கு கூடுதலாக 2 புதிய கிடங்குகள் ரூபாய் 12.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

மேலும், மயிலாடுதுறை மாவட்டத்தில் நோய்த் தடுப்பு சேவைகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் புதிய தடுப்பூசிக் கிடங்கு ரூபாய் 50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**33.**தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத்தின்கீழ், தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற நோயாளிகள் பிரிவு மற்றும் மருந்துக் கிடங்கு ரூபாய் 8.39 கோடி மதிப்பீட்டிலும், மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் நெஞ்சக நோய் சிகிச்சைப் பிரிவுக்கான கட்டமைப்பு ரூபாய் 2.03 கோடி மதிப்பீட்டிலும், புதிதாக கட்டப்பட்டுள்ள திருவள்ளூர்நசரேத்பேட்டை விபத்து பிரிவு கட்டடத்தில் மின் தூக்கி, இதர மின்சாரப் பணிகள் மற்றும் சாலை வசதிகள் ரூபாய் 1.24 கோடி மதிப்பீட்டிலும் மேம்படுத்தப்படும்.

**34.** தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத்தின்கீழ், முசிறி மற்றும் வாலாஜாபாத் அரசு மருத்துவமனைகளில் மருத்துவ உபகரணங்களுடன் கூடிய புதிய கட்டடம் ரூபாய் 6.35 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

தேசிய நலவாழ்வு குழும நிதியுதவியுடன் கம்பம், கறம்பக்குடி, கீரனூர், போரூர், தாராபுரம், ஒட்டன்சத்திரம், பாப்பிரெட்டிபட்டி, குடியாத்தம் மற்றும் சீர்காழி ஆகிய 9 அரசு மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்களுடன் விபத்து பிரிவுகள் ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**35.**திருநெல்வேலி - உணவுப் பாதுகாப்பு துறை அலுவலகத்தில் அமைந்துள்ள உணவுப் பகுப்பாய்வு ஆய்வகத்தில் ரூபாய் 1.69 கோடி மதிப்பீட்டில் கூடுதல் தளம் கட்டப்பட்டு நுண்ணுயிரியல் ஆய்வகம் அமைக்கப்படும்.

**36.** தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத்தின்கீழ், சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை, அரும்பாக்கம் அரசு சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்நோயாளிகளுக்கான கட்டணப் படுக்கைகள் (Pay Wards) ரூபாய் 3.00 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**37.**தாம்பரம் அரசு மருத்துவமனையில் சிறப்பு பல் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தி வேர் சிகிச்சை, சீரமைப்பு சிகிச்சை, செயற்கை பற்கள் அமைத்தல், குழந்தை பல் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை போன்ற சிறப்பு சேவைகள் ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**38.**தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத்தின்கீழ், சென்னை சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் மகப்பேறு மற்றும் குழந்தை நலக் கட்டடத்தில் கூடுதல் தளங்கள் ரூபாய் 15.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**39.**சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு அதிநவீன சி.டி.ஸ்கேன், சிஆர்ம் கருவி, அறுவை சிகிச்சைக்கு உதவும் அதிநவீன நுண்ணோக்கி, இருதயநுரையீரல் இயந்திரம், இருதய உள்ளூடுருவி ஆய்வகக் கருவி, எலும்பியல் மருந்துத் துறைக்கு தேவைப்படும் கருவி உட்பட உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 57.55 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**40.**இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும்48 திட்டத்தினை மேலும் வலுப்படுத்தும் விதமாக, தமிழ்நாட்டில் விபத்திற்குள்ளானவர்களை மீட்டு அவசர சிகிச்சைக்கு கொண்டு செல்ல 72 புதிய அவசரகால ஊர்திகளும், மலைவாழ் பழங்குடியினருக்கான 4 அவசரகால ஊர்திகளும், பிரசவித்த தாய் மற்றும் சேயை சிகிச்சைக்கு பின் அவர்களது இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்ல 36 தாய்சேய் நல ஊர்திகளும் வழங்கப்படும். மேலும், குளிரூட்டப்பட்ட பெட்டிகளுடன் கூடிய 31 அமரர் ஊர்திகள் வழங்கப்படும்.

**41.**தேசிய நலவாழ்வு குழும நிதியுதவியுடன், ஈரோடு மற்றும் கும்பகோணம் அரசு மருத்துவமனைகளுக்கும், திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள் ரூபாய் 25.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**42.**தேசிய நலவாழ்வு குழும நிதியுதவியுடன், சேலம், திருவாரூர், திண்டுக்கல், தேனி ஆகிய 4 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும், மற்றும் தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவமனைக்கும் சி.டி.ஸ்கேன் கருவிகள் ரூபாய் 12.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**43.**மணப்பாறை, முசிறி, பொள்ளாச்சி, கும்பகோணம், கோவில்பட்டி, காரைக்குடி, மேலூர், இராஜபாளையம், பெரியகுளம் மற்றும் ஆத்தூர் ஆகிய 10 அரசு மருத்துவமனைகளில் மார்பகப் புற்றுநோயினை கண்டறிய உதவும் மேமோகிராம் கருவிகள் ரூபாய் 2.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**44.** பென்னகரம், வேடசந்தூர், அருமனை, லால்குடி, மணச்சநல்லூர், கூத்தாநல்லூர் உட்பட 10 அரசு மருத்துவமனைகளில் CR வசதிகளுடன் கூடிய நவீன எக்ஸ்ரே கருவிகள் ரூபாய் 3.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**45.** தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத்தின்கீழ், டலூர்-திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு சி.டி.ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே கருவிகள் ரூபாய் 3.37 கோடி மதிப்பீட்டிலும், தூத்துக்குடி ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு CR வசதிகளுடன் கூடிய நவீன எக்ஸ்ரே கருவிகள் ரூபாய் 3.16 கோடி மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம்திருப்பெரும்புதூர் அரசு மருத்துவமனைக்கு டயாலிசிஸ் மற்றும் நவீன சலவை இயந்திரங்கள் ரூபாய் 3.54 கோடி மதிப்பீட்டிலும் வழங்கப்படும்.

**46.** உயர்ரக மருத்துவ உபகரணமான லேப்பராஸ்கோப்பி கருவிகள் 3 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும், உயர்தர சிறப்பு உபகரணமான இருதுளை லேப்பராஸ்கோப்பி (Double Puncture Laparoscopy) கருவிகள் 5 அரசு மருத்துவமனைகளுக்கும் ரூபாய் 6.34 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**47.**சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் லினாக் (LINAC) உயர்ரக மருத்துவக் கருவியின் செயல்பாட்டை துல்லியமான முறையில் மேம்படுத்திட சி.டி.சிமுலேட்டர் கருவி ரூபாய் 4.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**48.** சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையின் இரத்தநாள அறுவைப் பிரிவுக்கு உயர்ரக நாளஞ்சார் ஊடுகதிர் இடையீட்டுக் கருவியை (Vascular Imaging System) ரூபாய் 3.80 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**49.**கல்லீரல் செயலிழப்பிற்கான அதிநவீன இரத்த சுத்திகரிப்பு PLEX சிகிச்சை மருத்துவ உபகரணங்கள் விருதுநகர், நாமக்கல், கரூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை ஆகிய 8 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூபாய் 2.73 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**50.**அத்தியாவசிய மருந்துகள் மற்றும் ஆய்வக நுகர்பொருட்களின் தர மதிப்பீட்டினை உறுதி செய்வதற்கான மையம் ரூபாய் 12.00 கோடி மதிப்பீட்டில் சென்னை கிண்டியில் உள்ள கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப்படும்.

**51.** பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்ககத்தை சார்ந்த 45 மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு ரூபாய் 4.43 கோடி மதிப்பீட்டில் புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

**52.** தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவ மனைகளுக்கு தேவையின் அடிப்படையில் நீராவி சலவை மற்றும் CSSD வசதிகள் ரூபாய் 8.67 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

தொடர்ச்சி 8ஆம் பக்கம்